RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s1022

OPEN ACCESS

# கல்மரம் நாவல் வழி கட்டிடத்தொழிலாளர்கள் வரலாறும் சமூகநிலையும்

இரா. விமலாதேவி [அ, *]

[அ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா.

# History and Social Status of Construction Workers in the Novel "Kalmaram"

R. Vimala Devi [a, *]

[a] Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India.

* Corresponding Author: katturai100@gmail.com

Received: 21-09-2021
Revised: 31-05-2022
Accepted: 09-06-2022
Published: 12-08-2022

Check for updates

## ABSTRACT

From Sangam literature to contemporary literature, literature has recorded in many ways that a section of working people live in poverty and the people who enjoy the fruits of labour live in prosperity from time to time. Sangam literature has recorded the lives of many of the base people, such as Panars (poets), Koothars (actors), Viraliyars (female actors), who get food and gold from their patrons, and Kallars (thieves), who dare to kill passers-by for food. In ancient times, Proverbs said, "Call that a gift to needy men" and "The giver of food is the giver of life." From the period of devotional literature, in which paddy seeds were ground into rice and cooked food, to the period of small literature genres explaining the farmer's condition, to the present day literature, literature has recorded the inequalities of human society. The history of the foundational people is also recorded in the novel, a literary form of the twentieth century. In this way, the purpose of this review article is to show the need for them to be aware of the exploitation of labour by employers through the novel Kalmaram, written by Thilakavathi.

**Keywords:** Chalkboard, Levelboard, Thilakavathi, Water Level Boards, Hang Bombs

## முன்னுரை

விளிம்பு நிலை மக்கள் பற்றிய ஆய்வுகள் மேல்நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு பிறகு இந்தியத் தமிழ் ஆய்வுப்புலத்திற்கு வருகின்றன. இவ்வடிப்படையில் தமிழிலும் விளிம்புநிலை மக்களைப் பற்றிய ஆய்வு நவீன ஆய்வின் ஒரு பிரிவாகத் தோற்றம் பெறுகிறது. பின்நவீனத்துவம் குறித்த உரையாடல்களும் எழுத்துகளும் மேலெழுந்த போது விளிம்பு நிலை குறித்த கருத்தாடல்கள் புது வடிவம் பெற்றன. நவீனத்துவம் கொண்ட விளக்கங்களுக்கு அடுத்தகட்ட நகர்வாக இவ்விளிம்பு நிலையாக்க உருவாக்கங்கள் தோன்றின. சமூகக் கட்டமைப்பில் அதிகார மையத்தை நோக்கியதாகவே இருந்த கலை இலக்கியம் விளிம்பு நிலை நோக்கி மெதுவாக திரும்பத் தொடங்கியது. சமூகத்தில் உயர் நிலையில் வாழும் மனிதர்கள் அல்லது அவர்களைப் பற்றிய படைப்புகள் மட்டுமே முழுச் சமூகத்தின் முகமாக இருக்க முடியாது. சாதி, பால், இனம் என எல்லா தளங்களிலும் புறக்கணிப்புக்கு உள்ளாகி விளிம்பில் தள்ளப்பட்ட மனிதர்களின் வாழ்வியல் அடையாளம் காணப்பட்டால் மட்டுமே சமூக வெளிப்பாடு நிறைவுபெறும். நவீனமும் பின் நவீனமும் எழுத்துக்களை மடைமாற்றி இருக்கும் சூழலில் விளிம்பு நிலை மனிதர்கள் பற்றிய படைப்புகளின் உருவாக்கம் சமூக தேவையாகிறது. இவ்வகையில் இருபதாம் நூற்றாண்டு கலை இலக்கிய வடிவமான நாவல் விளிம்புநிலை மக்களின் வரலாற்றைப் பதிவுச் செய்ய ஏற்ற களமாக விளங்குகிறது. இவ்வகையில் எழுத்தாளர்கள் தம் படைப்புகளில் அடித்தள மக்கள் பலரின் வாழ்க்கையை பதிவு செய்துள்ளனர். எடுத்துக்காட்டாக உப்பளத்

தொழிலாளர்களின் வாழ்வைப் பதிவு செய்யும் ராஜம் கிருஷ்ணனின் கரிப்பு மணிகள், ஆடு கிடை போடும் மக்களின் வாழ்வைப் பதிவுச் செ ய்யும் தமிழ்ச்செல்வியின் கீதாரி, செருப்பு தைக்கும் தொழிலாளியின் வாழ்வைப் பதிவுச் செய்யும் பூமணியின் பிறகு, அணைகட்டும் தொழிலாளர்களின் வாழ்வைப் பதிவுச் செய்யும் சு. சமுத்திரத்தின் புதிய திரிபுரங்கள், கட்டிட தொழிலாளியின் அவல வாழ்வைப் பதிவு செய்யும் சு. சமுத்திரத்தின் ஒரு நாள் போதுமா எனப் பலவற்றையும் சுட்டலாம். இவ்வகையில் திலகவதி கல்மரம் நாவலில் கட்டிடத் தொழிலாளர்களின் வறுமையுடன் பிணைந்த வாழ்வைச் சமூகவியல் அணுகுமுறை அடிப்படையில் பதிவுச் செய்துள்ளார்.

## அடித்தள மக்கள்

மேட்டிமை குழுவிற்கு நேர்மாறாக எண்ணிக்கையில் அதிகமானவர்களாகவும் சமுதாயத்தின் வளங்களில் உரிய பங்குப் பெற முடியாதவர்களாகவும் குறைந்த அளவு உணவு, உடை, குறைந்த கல்வி பெற்று வாழும் மக்கள் பிரிவினரே அடித்தள மக்கள் எனப்படுகின்றனர். இந்தியச் சூழலில் அடித்தள மக்கள் என்பதற்கு சாதி, செய்யும் தொழில், அரசியல், ஆதிக்கம், பாலியல் நிலை, பொருளாதார நிலை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் அல்லது அனைத்து நிலைகளிலும் தாழ்ந்திருக்கும் மக்கள் என ஓர் எளிய வரையறை செய்யலாம் (Sivasubramanian, 2016).

அடித்தள மக்கள் ஆய்வுகள் என்பன ரணஜித் குகா மற்றும் அவரது குழுவினரால் 1980களில் அறிமுகம் செய்யப்பட்ட ஒரு வரலாற்று ஆய்வு முறை. தற்கால இந்திய வரலாறு (காலனீய - தேசிய காலகட்டம்) எழுதுதலில் உள்ள மேட்டிமை (Elitist) அணுகல் முறையை விமர்சித்த இவர்கள் அதற்கு ஒரு மாற்றாக அடித்தள மக்கள் ஆய்வு முறையை (Subaltern studies) முன்வைத்தனர். (Marx & Velusamy, 2010).

## கட்டிடத்தொழிலாளர்கள்

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் தமிழகத்தில் பெருமளவில் தொழிற்சாலைகள் உருவாகின. இதன் காரணமாக தொழிலாளர் வர்க்கம் என்னும் ஒரு பிரிவு உருவாயிற்று. மழை இல்லை. விவசாயம் இல்லை. கூலி வேலைக்குச் செல்ல வழியில்லை என்ற நிலையில் நகரத்தைத் தேடி வரும் மக்களுக்காகவே காத்திருக்கிறது கட்டிடத் தொழில். கட்டிடத் தொழிலாளிகளாக இருப்பவர்கள் பெரும்பாலும் கிராமத்து ஏழைகளே பிழைப்புத் தேடி நகரத்தை நோக்கி வந்து பல்வேறு காரணங்களால் அங்கு தங்க நேரிட்டவர்கள் கட்டிடத் தொழிலாளர்கள் ஆகின்றார்கள்.

## நாவல் சுருக்கம்

கணவனை இழந்த ஆதிலட்சுமி தன் மகன் காசி, திருமணம் ஆகி கணவனைப் பிரிந்து வந்திருக்கும் மகள் கண்ணியம்மா மற்றும் திருமணமாகாத மகள் காவேரியுடன் வசித்து வருகிறாள். தன் கணவன் கட்டிட வேலை செய்யும்போது இறந்ததால் தன்மகனை கட்டிட வேலைக்கு அனுப்ப மறுத்து அவனுக்குத் திருமணம் செய்து வைக்கிறாள். மருமகள் ராகினி பத்தாவது வரை படித்தவள். தெளிவானவள். கட்டிட வேலை செய்யும் இடத்திற்குக் காவலாளியாகச் செல்லும் கணவனுடன் சென்று முதலாளியின் ஒத்துழைப்புடன் கணக்கு எழுதும் பணியைப் பெறுகிறாள். அங்கு நடக்கும் தவறுகளை முதலாளியின் பார்வைக்குக் கொண்டு செல்வதன் மூலம் அவனது ஆதரவைப் பெறுகிறாள். ஆனாலும் தவறே செய்யாத தன் கணவனையும் கட்டிடத் தொழிலாளர்களையும் தண்டிப்பது, அவசர மருத்துவ உதவிக்குக் கூட பொருளுதவி செய்ய மறுப்பது, தன் வேலை நடைபெறாமல் இருப்பதாக அவர்களை குற்றம் சாட்டுவதும் ஆகிய நிகழ்வுகளைக் கண்டு முதலாளி ஏழைத் தொழிலாளிகளை அடிமை போல நடத்துவதைப் புரிந்து கொள்கிறாள். முதலாளியிடம் உரிமை பெற சங்கம் அவசியம் என அறிந்து விபரம் அறிந்த சுசிலாவின் வழியாக அனைவரையும் சங்கத்தில் இணைக்கிறாள். இனி முதலாளி கூலி கொடுக்க மறுத்தால் சங்கம் வழியாகப் போராடிப் பெறலாம் என அனைவருக்கும் நம்பிக்கை ஊட்டுகிறாள்.

## வாழ்வியல் சிக்கல்கள்

திலகவதி கல்மரம் நாவல் வழியாக கட்டிடத் தொழிலாளர்கள் முதலாளிகளால் பாதிக்கப்படுவதையும், வறுமையின் கோரதாண்டவம், உரிய நேரத்தில் உழைப்புக்கு உரிய ஊதியம் பெறாமையால் பசியால் வருந்துவதையும், அடிப்படை மருத்துவ உதவி கூட பெற முடியாத நிலைமையையும், நிரந்தர வேலை வாய்ப்பின்மையும், உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுதலையும், எவ்வளவு உயரமான கட்டிடங்களை வாழ்நாள் முழுவதும் கட்டினாலும் ஒழுகாத ஒரு வீடு கூட இல்லாத நிலையையும், இறக்கும்வரை தன் உணவுக்காக உழைத்துக் கொண்டே இருக்க வேண்டிய அவலத்தையும் பதிவுச் செய்துள்ளார்.

மனிதனின் அடிப்படைத் தேவைகள் உண்ண உணவு, உடுக்க உடை, வசிக்க வீடு. நாள் முழுவதும் உழைக்கும் கட்டிடத் தொழிலாளர்களால் இந்த அடிப்படை வசதிகளைக் கூட பெற முடியவில்லை.

## உணவு

அடித்தள மக்கள் பலரும் உணவுக்கே போராடும் நிலையை நாவல்களில் நாவலாசிரியர்கள் பதிவுச் செய்துள்ளனர். அவ்வகையில் பருக்கை நாவலில் உணவு பரிமாறும் தொழிலாளர்கள் போதிய உணவின்றித் தவிப்பதையும் இலைகளில் உணவு மீதமாகிக் குப்பைக்குச் செல்வதையும் காட்சிப்படுத்தியுள்ளார். திருமண வீட்டில் பந்தி முடிந்தவுடன் எச்சில் இலை எடுக்கும் ஒரு கிழவி சாப்பிட்ட இலைகளில் மீதமிருந்த சாப்பாட்டிலிருந்து கறியைப் பொறுக்கிக் கொண்டும் பொறுக்கிய கறித்துண்டுகளை வேறு இலை ஒன்றில் எடுத்து வைத்துக்கொண்டும் இருந்தாள். இதப்போய் ஏன் எடுக்குற பாட்டி எனக் கேட்க என் பேத்திக்கி கறினா ரொம்ப இஷ்டம் என்றாள் உள்ளே மிச்சம் இருப்பதை எடுத்துக் கொள்ளக் கூடாதா எனச் செல்வா கேட்க இது சாப்பிட்ட எச்சி அது சாப்பிடாத எச்சி எங்க இருந்தாலும் மீந்து போனதுதான் எங்களுக்கு. கடைசில அதுவும் கிடைக்குமோ கிடைக்காதோ என மீதமான உணவும் கிடைக்காத உண்மையை கூறுகிறாள் (Veerapandiyan, 2012). உணவுச் சமநிலையின்மையை அழகாக காட்சிப்படுத்துகிறார்.

உடலுழைப்பில் ஈடுபடுபவர்கள் போதுமான அளவு சத்தான உணவு உண்டால் மட்டுமே அவர்களால் வேலை செய்ய இயலும். ஆனால் மாதத்தில் பல நாட்கள் வேலை கிடைக்காத போது கிடைக்கும் உணவையே உண்ண வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிறார்கள். கட்டிடத் தொழிலாளியான காசி தன் மனைவியிடம் அப்ப சோறு எனக் கேட்க தண்ணி சோறு தான் எனப் பதில் அளிக்கிறாள். எப்ப பாரு தண்ணி சோறு இல்லனா பழைய சாம்பார் நாக்கு செத்துப் போச்சு என்கிறான். நீங்க வேலை இல்லாம வாரத்துக்கு நாலு நாள் ஊட்டுல விழுந்து கிடக்க சொல்ல நாம்ப இந்த வீட்டில ஒரு முடக்கு தண்ணி குடிக்கிறது கூட கேவலம் தான் (Thilakavathi, 2005). எனக் கூறுவதன் மூலம் உணவுக்கே வழியின்றித் தவிக்கும் அவல நிலையை கல்மரம் நாவலில் பதிவுச் செ ய்துள்ளார் திலகவதி.

## உடை

வெயிலிலும் குளிரிலும் மனிதனை பாதுகாக்கத் தேவையானது உடை. மனிதனின் உடலைப் பாதுகாக்கவும் அவன் மானத்துடன் வாழவும் உடை அவசியம். அத்தகைய உடைக்கும் வழியின்றி தொழிலாளர்கள் வாடுவதை மலைப்பிரதேசத்தின் கடுங்குளிரிலும் ஏலத் தோட்டத் தொழிலாளர்கள் மேலாடையின்றி வேலை செய்வதை

தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கும் போது குளிர் காற்று வீச ஆரம்பித்தது அப்போது அனைவரும் வேட்டியை அவிழ்த்துக் காதோடு தலையில் கட்டிக்கொண்டு கொங்காணி போட்டுக்கொண்டு வேலை குளிராலே ஒடலு நடுங்குதண்ணே கைவிரல் கள்ளாம் மரத்துப்போயி பார்த்தனர் “அண்ணே பழம் பறிக்க முடியல்லே” (Kothandam, 2017)

கூறுவதோடு தொழிலாளர்கள் தம் உடலை மறைக்கத் தேவையான அத்தியாவசிய உடையின்றி வாடுவதையும் தம் ஏலச்சிகரம் நாவலில் பதிவுச் செய்துள்ளார்.

காவேரி உடுத்தி இருந்த பாவாடையின் கீழ் விளிம்பு நைந்து நா ராகப் போயிருந்தது. அதிலிருந்து தொங்கி தரையைத் தொட்டுக் கொண்டிருந்த நூல் கொத்தை உருவி எறிந்து விட்டுத் தலை நிமிர்ந்தாள். (திலகவதி, 2005)

எனக் கட்டிடத் தொழிலாளர்களின் உடை மிகவும் கிழிந்து நைந்த நிலையில் இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வீடு

உழைத்துக் களைத்து வரும் மனிதன் ஓய்வெடுக்க வீடு அவசியம்.

உப்பளத் தொழிலாளர்களின் வாழ்வைப் பதிவுச் செய்யும் கரிப்பு மணிகள் நாவலில் தொழிலாளர்கள் வீட்டில் அடுப்பும் கூட இடிந்திருக்கிறது. நீர்ப் பானையும் கூடக் கழுத்தில் ஓட்டையாக இருக்கிறது. துணியைச் சுருட்டி அடைத்திருக்கிறார்கள். பித்தளை என்பது மாதிரிக்குக் கூட கிடையாது. அலுமினியக் குண்டான் தவிர உணவு கொண்டு செல்லும் தூக்குப் பாத்திரங்கள் தாம் இருக்கின்றன. வாளியும் ஒழுகிறது. துணிக்கந்தையால் அடைத்திருக்கிறார்கள். (Rajam Krishnan, 1997) என உப்பளத் தொழிலாளியின் வீட்டின் அவல நிலையை பதிவுசெய்துள்ளார்.

உழைத்து க் களைத்து வரும் மனிதன் ஓய்வெடுக்க வீடு அவசியம். நாள் முழுவதும் வெயிலில் பல மாடிக் கட்டிடங்களை எழுப்பும் கட்டிடத் தொழிலாளர்கள் வசிக்கும் வீடு ஒழுகும் குடிசை வீடாகவும் வெள்ள நீர் உள்ளே செல்லும் நிலையிலேயே உள்ளது. இதை தன் நாவலில் காசிக்குத் தன் குடிசையின் நினைவு வந்தது. மழை வந்த கையோடு அங்கே வெள்ளம் வந்துவிடும். எல்லாம் சேறும் சகதியுமாக நிறைந்துவிடும். ஒவ்வொரு குடிசையும் வெள்ளத்தின் நடுவே தனித்தனித் தீவாகத் திட்டாகத் தெரியும். கூரையும் ஒழுகும். அம்மாவும் கண்ணியம்மாவும் காவேரியும் மழை ஒழுகும் இடங்களில் சட்டி, பானை, அலுமினியக் குண்டான், பிளாஸ்டிக் பாத்திரங்கள் என்று கிடைக்கின்றவற்றை வைத்துக் கொண்டிருப்பார்கள். அடுப்பை பற்ற வைப்பது என்ற பேச்சுக்கே இடமில்லாமல் தரையெல்லாம் நீரூறி கசகசக்கும். வைக்கோலைப் பரப்பி அதன்மேல் பாய் விரித்து தான் படுக்க முடியும்.

வீட்டுத் திண்ணையருகே இரண்டு மட்டப் பலகைகள், ஐந்தாறு கொலுத்துக்கரண்டிகள், மூன்று நீர்மட்டப் பலகைகள், சில தூக்குக் குண்டுகள் எல்லாம் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. (Thilakavathi, 2005)

என கட்டிடத் தொழிலாளியின் வீட்டைக் காட்சிப்படுத்துகிறார். ஒரு குடும்பம் நாள் முழுவதும் உழைத்தாலும் வழங்கப்படும் குறைவான கூலியின் காரணமாகவும் பல நாட்கள் வேலை கிடைக்காத காரணத்தாலும் கிடைக்கும் சொற்ப கூலியில் தங்களது அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாத வறுமை நிலைக்குத் தொழிலாளர்கள் தள்ளப்படுகின்றனர்.

## உழைப்புச்சுரண்டல்

“உழைப்பு என்பது தன் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக இயற்கைப் பொருட்களை மாற்றியமைப்பதை நோக்கமாகக் கொண்ட மனிதனின் செயல் நோக்கமுள்ள நடவடிக்கை என்பார்” (Baskaran, 1987).

தொழிலாளர்கள் உழைப்பை உறிஞ்சுவதிலேயே குறியாக இருக்கும் முதலாளி அவர்கள் எவ்வளவு சிறப்பாக வேலை செய்தாலும் பாராட்டுவதில்லை. மாறாக கோபத்துடன் நடந்து கொண்டாலே அவர்கள் ஒழுங்காக வேலை செய்வார்கள் எனும் மனப்போக்குக் கொண்டு விளங்குகிறார்.

தொழிலாளிகள் எவ்வளவுதான் மாடாக உழைத்தாலும் அவர்களைப் பாராட்டி ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாது அது அவர்களுடைய உழைப்புத் திறனை குறைத்து விடும். எப்போதும் கெடுபடியோடு நடந்து கொண்டால் தான் அவர்கள் நன்றாக வேலை செய்வார்கள்என்பது ஆர் ஆர் எம்மின் தத்துவம். கடந்த 20 ஆண்டுகளாக அந்த தத்துவத்தையே அவன் இம்மியும் பிசகாமல் கடைப்பிடித்து வருகிறான் (Thilakavathi, 2005).

## உயிருக்கு உத்தரவாதம் இல்லை

தொழிலாளிகளுக்கு ஏதேனும் அசம்பாவிதம் நடந்து உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அவர்கள் இழப்பீடு கேட்கக்கூடாது என்பதைக் குறிக்கோளாக கொண்டு முதலாளி செயல்படுகிறார். கட்டிட வேலைக்கு வர்றவங்க எல்லோருமே ஏழை பட்டவங்க அண்ணனிக்கு உழைச்சு அண்ணனிக்கி செலவுக்கு வழி பண்ணிக்கிட்டு மானமா வாழ்ந்தா போதும்னு நினைக்கிறவங்க அன்னாட சம்பாதிச்சு அன்னாடம் வைத்து இருக்கிறவங்க திடீர்னு ஏதானும் ஆயிட்டா என்ன பண்ணுவாங்க (Thilakavathi, 2005). மேஸ்திரி முதலாளியிடம் கேட்கும் நிலையிலேயே கட்டிடத் தொழில் உள்ளது.

## குறைந்த தொகையை இழப்பீடாக வழங்குதல்

மேஸ்திரி அதிக தொகை கேட்டால் முதலாளியிடம் இருந்து கிடைக்காது என அறிந்து மிகக் குறைவான தொகையைத் தொழிலாளிகளுக்கு பெற்றுத்தர முன்வருகிறார் ஏதோ நூறு இருநூறு கொடுக்கலாம் நினைக்கிறேன் என்கிறார் மேஸ்திரி. ஆயிரக்கணக்கில் எதிர்பாராமல் இந்த குறைந்த தொகையை வீராசாமி சொன்னாரே என்று ஆறுதல் கொண்டு மனதிற்குள் பெருமூச்சு விட்டுக் கொண்டான் ஆர்ஆர்எம் (Thilakavathi, 2005).

## அதிகாரப் போக்கு

கட்டிடத் தொழிலாளிகளிடம் விரட்டி விரட்டி அதிகாரமாக வேலை வாங்குவதிலேயே குறியாக உள்ளார் முதலாளி. கட்டிடக் காவலாளியாக வந்து தங்கியிருக்கும் காசியிடம் கட்டிட முதலாளி ஆர்ஆர்எம் ஆமா உனக்கு கல்யாணம் ஆயிடுச்சா? என்று கேட்டார். ஆயிடுச்சு சார் என்றான் காசி துறையை பார்த்தபடி குழந்தைய இருக்குதா? இல்லிங்க. ரொம்ப நல்லது. பிளாட்ஸ் கட்டி முடிகிற வரை அதெல்லாம் இல்லாம இருக்கிறதே நல்லது. ஆனால் ஒரு நிமிஷம் கூட இந்த காம்பவுண்டுக்கு வெளியே நீ போய் தங்கக் கூடாது என்ன என்றார் அதிகாரக் குரலில். (Thilakavathi, 2005) எல்லாவகையிலும் தொழிலாளர்கள் மீது உழைப்புச் சுரண்டல் நிகழ்த்துவதில் முதலாளிகளின் முழு நோக்கமும் இருக்கிறது.

இதனை மாற்ற வேண்டும். என்ற நோக்கிலேயே பாரதிதாசன்

"நடவு செய்த தோழர் கூலி
நாலணாவை ஏற்பதும்
உடலுழைப்பில்லாத செல்வர்
உலகை ஆண்டுலாவலும்
கடவுளானை என்றுரைத்த
கயவர் கூட்டமீதிலே
கடவுள் என்ற கட்டறுத்துத்
தொழிலாளரை ஏவுவோம்"

தொழிலாளர்கள் வீறு கொண்டு எழ வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார் (Shanmuga Sundaram, 2016). கூலி என்பது தற்கால முதலாளித்துவ அமைப்பில் உழைப்பவன் உயிர்வாழ்வதற்கு மட்டும் அவசியமானவற்றை தரக் கூடியதாக இருக்கின்றது அவன் உழைப்பிற்கு தக்கபடி இருப்பதில்லை மிகக் குறைந்த கூலியில் அதிக உழைப்பை வேண்டுவதாக இருப்பதால் தொழிலாளிகளால் அவர்களது அடிப்படை தேவைகளைக் கூட நிறைவு செய்ய முடிவதில்லை என்றும் வறுமை நிலையிலேயே வாழ வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்படுகிறான் தொழிலாளி என்பவன் தன்னுடைய அருமையான புத்தியை, தொழில் திறமையை வெறும் சோற்றுக்கு விற்பவன் ஆகவும், வயிற்றுப் பிழைப்பிற்காக தன்னுடைய அறிவை - தொழிலை மாற்றுப் பண்டமாக விற்பவனாகவும் இருக்கிறான் என்பார் பெரியார் ஈ.வே.ரா. (Aanaimuthu, 1974) இவரின் கூற்றுப்படி தொழிலாளர்கள் உழைப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்டு குறைந்த கூலியில் உழைக்கின்றனர். இதனால் இவர்களின் வாழ்வியல் நிலை வறுமையோடு கூடியதாக சமூகத்தின் அடி நிலையில் உள்ளது (Thenmozhi, 2017).

## முடிவுரை

தொழிலாளர்கள் ஒன்றுபட்டுத் தனக்கென ஒரு சங்கத்தின் மூலமாக இணைவதும், அதன் மூலமாக முதலாளிகளைக் கேள்விக்கு உட்படுத்துவதும், தங்களது பலத்தை அறிந்து கொள்வதும் இதற்கான தீர்வாக அமையும் என்பது திலகவதி அவர்களின் கருத்தாக இந்நாவலில் அமைந்துள்ளது. ஒற்றுமை பெற்ற தொழிலாளி வர்க்கத்தை விட உலகத்தில் பலமானது எதுவுமில்லை என்பதைத் தொழிலாளர்கள் புரிந்துக்கொ ண்டால் நிச்சயம் மாற்றம் உருவாகும்.

## References


Aanaimuthu, V., (1974) Periyar Sindhanaigal, Sinthanaiyalar Kalagam, Tirchy, India.

Baskaran, R., (1987) Arasiyal Porulatharam Endraal Enna? Munnetra Pathippagam, Masco.

Kothandam, K, M., (2017) Ealasigaram, Kavya Pathippagam, Chennai, India.

Marx, A., Velusamy, P., (2010) Vilimbunillai Aayvukalum Tamil Kadhaiadal, Chennai, India.

Rajam Krishnan, (1997) Karippu Manigal, New Century Book House, Chennai, India.

Shanmuga Sundaram, Su., (2016) Bharathidasan Kavithaikal, Kavya Pathippagam, Chennai, India.

Sivasubramanian, A., (2016) Adithala Makkal Varalaru, New Century Book House, Chennai, India.

Thenmozhi, P., (2017) S. Samuththiram Novelgalil Tholilalar Patria Sinthanaigal, Pallavi Pathippagam, Erode, India.

Thilakavathi, (2005) Kalmaram, Amrutha Pathippagam, Chennai, India.

Veerapandiyan, (2012) Parukkai, Parichal Puthaga Nilaiyam, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License